௨. Translated

பம்பைக்காரன் சொன்ன பூனை, நரி கதையை நீங்கள் படிப்பதற்காக ~~கதையை~~ சுருக்கமாகவும், சுத்தமாகவும் கதையை சிறிதாக எழுதுகிறேன் படியுங்கள்.

கதை: ஒரு வீட்டிலிருந்த பூனையொன்று காட்டுக்குள் சென்றது. அந்தக் காட்டுக்குள் ஒரு நரி உட்கார்ந்திருந்தது. அந்த நரியானது பூனையைக்கண்டதும் "பூனையண்ணே, பூனையண்ணே! உனக்கு வீட்டில் (ஊரில் உள்ள வீடுகளில்) பால் இருக்கிறது, தயிர் இருக்கிறது, மோர் இருக்கிறது நீ அந்த சாப்பாடுகளை சாப்பிடுகிறாய்! நான் ஊருக்குள் வந்தால் ஊர் ஜனங்கள் எல்லாம் தடியை எடுத்துக்கிட்டு வந்து என்னை துரத்தி அடிக்க விடுவார்கள். நான் காட்டுக்கே திரும்பி ஓடிப்போக வேண்டியதுதான் இந்த சாப்பாடெல்லாம் எனக்கு கிடைக்காது" என்று, நரி சொல்லியது.

அதற்கு இந்த பூனை "அண்ணே! நரியண்ணே, நரியண்ணே! நீ, பொழுது விழுந்து (சூரியன் மறைந்தபின்) வீட்டு பொடக்காலியின் ~~உள்~~ (வீட்டின் பின்புறம் காலி இடம்) உள்ளே வந்து போருக்குள்ளே (சோளத்தட்டு, கம்புதட்டு ஆகிய மாட்டுத்தீன் பண்டங்களின் இருப்பிடம்) வந்து படுத்திரு! நான் வந்து உன்னை வீட்டுக்குள்ளே கூட்டிக்கிட்டுப் போயி, உனக்கு வேண்டிய எல்லா சாப்பாடும் போடுகிறேன். நீ, நல்லா சாப்பிட்டு விட்டு அதற்குப்பின் நீ காட்டுக்குப் போய்விடலாம்" என்று பூனை சொல்லியது. பிறகு இந்தப்பூனை திரும்பி வீட்டுக்கு வந்து விட்டது.

இந்த நரி ஒரு ~~கு~~ காட்டுக்குச் (சிறிய மலை) சென்று தண்ணீரில் குளித்து, ஆடை யாபரணங்கள் (துணிகள், நகைகள்) எல்லாம் உடுத்தி, சந்தனம் ஜவ்வாது உடம்புக்கு பூசிக்கொண்டு அன்று சூரியன் மறைந்து இருட்டியவுடன் சுமார் ஆறுமணிக்கு புறப்பட்டு பூனையிருக்கிற வீட்டு பொடக்காலிக்குள் சென்று பூனை சொல்லியபடி போருப்பட்டியின் உள்ளே படுத்துக் கொண்டது. பகலில் நரியை அனுப்பிவிட்டு வீடு திரும்பிய பூனையானது பக்கத்து ~~வீடுகளில்~~ வீடுகளுக்குச் சென்று பால், தயிர், மோரு இவைகளும் மற்றும்

3,

பலகாரங்கள் எல்லாம் எடுத்து வந்து வைத்து விட்டு பிறகு, ஒரு நாடார் வீட்டுக்குச் சென்று ஒரு குடம்பத்து நிறைய கள்ளுத்தண்ணி(கள்) எடுத்துக் கொண்டு வந்து வைத்து விட்டு நரியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது.

~~பொழுது~~ பொழுது(சூரியன்) மறைந்ததும் பூனையானது பொடக்காளிக்குள் சென்று போருப்பட்டிக்குள்ளே பார்த்தது. நரி அங்கு உட்கார்ந்திருந்தது. அதைக்கண்ட பூனை "நரியண்ணே, வாண்ணே! இன்னைக்கு உனக்கு நல்ல விருந்து! (சாப்பாடு) என்று சொல்லி கூட்டிக் கொண்டு வீட்டுக்குள் அட்டாலிமேல் போய் நரியை அட்டாலிமேல் உட்கார வைத்து விட்டு ~~[illegible]~~ பால், பழம், தயிரு, மோரு, தேங்காய் இப்படி அந்த வீட்டில் என்ன எல்லாம் இருக்கிறதோ அவைகளை எல்லாம் கொண்டு வந்து நரியின் முன்(இலையில்) வைத்து நல்ல சாப்பிடு அண்ணே! நீ, எங்க போறே? எங்க வாரே?" என்று பூனை சொன்னது.

அதுக்கு நரியானது "ஆமாண்ணே, பூனையண்ணே! உன்னைப் போல் நான் வீட்டில் இருந்து பழக்கமிருந்தால் எனக்கும் இப்படி சாப்பாடு கிடைக்கும்! நான் இங்கு இருப்பது இப்ப, ஜனங்கள் கண்டாலும் தடியெடுத்துக்கிட்டு என்னை துரத்தி அடிக்கி வாங்கலே, நான் ஓட வேண்டியது தானே?" என்று நரி சொல்லியது.

அதுக்கு பூனையானது "அண்ணே, அண்ணே! இப்போது அதையெல்லாம் பேசாதே! வயிறு நிறைய சாப்பிடுகிற வேலையைப் பாரண்ணே, நரியண்ணே!" என்று பூனை சொல்லியது. பிறகு, நரி நன்றாக சாப்பிட்டு முடித்து விட்டதும் அட்டாலியில் உள்ள விட்டத்தில் நரி ஒரு விட்டத்திலும், பூனை ஒரு விட்டத்திலும் உட்கார்ந்திருந்தார்கள்.

அப்போது அந்த பூனையானது நரியை நோக்கி "ஏண்ணே, நரியண்ணே! நீ, போதை வஸ்து வான (கள், சாராயம்)

சாமானங்கள் சாப்பிட்டிருக்கிறியாண்ணே?" என்று பூனை கேட்டது அதுக்கு அந்த நரியானது ஆமாண்ணே! மதனம் (போதை வஸ்து) சாப்பிட்டு ரொம்ப நாளாகுது அதை சாப்பிட்டா போதை வருமா? சரி! பால், தயிர், சாப்பாடு இவைகள் எல்லாம் எனக்கு நிறையக் கொடுத்தாய்! இப்போ அதுவும் (கள்ளு, சாராயம்) கொஞ்சம் கொண்டாந்து கொடண்ணே! என்று நரி கேட்டது.

அதைக் கேட்டதும் பூனையானது தேடிப்படியும் போயி கொஞ்சம் கள்ளு! கொஞ்சம் சாராயம்! கொஞ்சம் கஞ்சா இவையெல்லாம் கொண்டாந்து விட்டத்தின் மேல் வைத்து நரியை நோக்கி "சாப்பிடண்ணே!" என்று பூனை சொன்னது.

கள்ளு, சாராயம், கஞ்சா மூணு சாமானத்தையும் நரி சாப்பிடவும் நல்லா போதை வந்துவிட்டது பூனையை நோக்கி "பூனையண்ணே, பூனையண்ணே! நான் ஒரு நாள் கூட இவ்வளவு ஆனந்தமா இருந்ததில்ல கொஞ்சம் பாட்டு வருதண்ணே!" என்று நரி சொல்லவும் அதற்கு பூனை "முன்னமே நரியென்று சொன்ன உலகமே சேர்ந்து உன்னை அடித்துத் துரத்துவாங்க! அப்படியிருக்க நீ! பாட்டுப் பாடுகிறேன் என்று சொல்கிறியே? என்னமோ நான் சொல்வதை கேட்டாக்கேளு; விட்டா விடு! இப்போ நீ பாட்டுப் பாடினால் இந்த ஊரு ஜனங்கள் எல்லாம் வந்து வீட்டைச் சுற்றியும் நின்று உன்னை துரத்துவார்கள். அதனால், உனக்குத்தான் கஷ்டம்! நான் தப்பித்து இந்த வீட்டை விட்டு வேறு வீட்டுக்கு ஓடிப் போயிடுவேன்!" என்று பூனை சொன்னது.

பூனை சொன்னதை நரி கேட்காமல் நல்லா விட்டத்தில் படுத்துக்-கொண்டு "உக்கே! உக்கே! உக்கே" (நரி கத்துவது) என்று சத்தம் போட ஆரம்பித்தது.

நரி போட்ட சத்தம் ஊர் ஜனங்கள் கேட்டு ஊருக்குள் நரி புகுந்துவிட்டது என்று தடிகளை எடுத்து வந்து நரி சத்தம் போட்ட வீட்டை தடியால் இத்து பிரித்து பார்க்கற போது நரியானது செத்தது போல் விட்டத்தின் மேல் படுத்திருந்தது.

அதைக்கண்ட ஊருச் ஜனங்கள் "இந்த நரியை வீட்டுக்குள்

கூட்டி வந்தது யாரு? இந்த பூனையண்ணன் செய்த வேலையாகத்-தான் இருக்கும்" என்று ஊருக்குள் சென்று பூனையைத் தேடி பிடித்துக் கொண்டு வந்து ஏண்ணே, பூனையண்ணே! இந்த நரியை வீட்டுக்குள் கூட்டி வந்தது யாரு? என்று ஊர் ஜனங்கள் பூனையை கேட்டார்கள்.

அதற்கு பூனையானது "நான் தான் அவனைக் கூட்டி வந்து வைத்தேன். அவன் பேச்சைக் கேட்டு நானுங் கெட்டேன்! என் பேச்சைக் கேட்டு அவனுங் கெட்டுப் போய் விட்டான். சரி அதுதான் செத்துப் போய் விட்டதே இனி விட்டிருங்க, போகட்டும்!" என்று பூனை சொல்லியது.

அதைக் கேட்ட ஊர் ஜனங்கள் எல்லோரும் அவரவர்கள் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

அவர்கள் எல்லாம் போனபின் நரி எழுந்து காட்டுக்குப் போக அங்கிருந்த மற்ற நரிகள் எல்லாம் "அடே! இவன் எங்கயோ போயி நல்லா சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறான்" அப்பிடின்னு இந்த நரிகள் எல்லாம் வீட்டுக்குப் போய் வந்த நரியிடம் போனதுகள். இவர்களைக் கண்டதும் வீட்டுக்குப் போய் வந்த நரியானது "அண்ணே! வீடெல்லாம் கள் இருக்குது! சாராயமிருக்குது! தயிரிருக்குது! மோரிருக்குது. நாளைக்கு பொழுது விழுந்ததும் நீங்கள் எல்லோரும் ஊருக்குள்ளே போயி வீட்டுக்கொரு ஆள் சென்று சாப்பிட்டுப் பாருங்க!" என்று இந்த நரி சொல்லியது.

அதைக் கேட்ட இந்த நரிகள் எல்லாம் மறுநாள் பொழுது விழுந்து மறைந்ததும் எல்லா நரிகளும் ஊருக்குள் சென்றதுகள். இந்த நரிகள் வந்ததை பூனை பார்த்து அவைகளை நோக்கி "நேற்று ஒரு நரியண்ணன் வந்தான். எல்லா நரிக்கும் நான் ராஜா!' வென்று சொன்னான். இங்கு வந்து ரொம்பவும் கஷ்டப்பட்டுச் செத்தான். ஆகையால், நீங்கள் ஒருவரும் இங்கு இருக்க வேண்டாம்! திரும்பி போயிருங்கப்பா!" என்று பூனை சொல்லியது.

இந்த பூனை சொன்னதைக் கேட்ட நரிகள் எல்லாம் ஊருக்குள் கொஞ்சம் சாப்பாடு எடுத்துக் கொண்டு திரும்பி காட்டுக்குள்

சென்று அந்த நரிகளில் ஒரு நரி மற்ற நரிகளை நோக்கி "அண்ணே! அண்ணே!! நாமும் இந்த சாப்பாடு சாமானங்கள் எல்லாம் கொண்டுக்கிட்டு வந்திருக்கிறோம். இன்னைக்கி (இன்று) நாம எல்லோரும் விரதம் இருக்கலாமண்ணே!" அப்பிடீன்னு அவர்கள் கொண்டுவந்த சாப்பாட்டு சாமானங்களை நடுவில் வைத்துவிட்டு நரிகள் எல்லாம் சுற்றியும் உட்கார்ந்து கொண்டது.

பிறகு, ஒரு நரி [redacted] "அண்ணே, அண்ணே! பொழுதுக்கும் விரதம் இருக்கிறோம் அல்லவா? இந்த சாமானங்களையெல்லாம் எடுத்து கையில் வைத்துக் கொண்டு விரதமிருக்கலாமே" என்றது. அதைக் கேட்ட மற்ற நரிகளும் சேர்ந்து சாப்பாடு சாமானங்களையெல்லாம் ஆளுக்குக் கொஞ்சம் கையில் எடுத்துக் கொண்டதுகள்.

பிறகு ஒரு நரி "அண்ணே! இந்த சாப்பாட்டை கையில் வைத்திருக்கறதை விட வாயில் போட்டு வைத்துக் கொள்ளலாம்! முழுங்கினத்தானே விரதங் கொறையும்?" என்றது[redacted]. அதன்படி எல்லா நரிகளும் வாயில் போட்டு வைத்துக்[redacted] கொண்டது.

பிறகு, ஒரு நரி "அண்ணே! எல்லோரும் வாயில் போட்டுக்கொண்டோம் அல்லவா? அதை [redacted] சாப்பிட்டே விடலாம் அண்ணே!" என்று எல்லா நரிகளும் வாயில் போட்ட சாப்பாடுகளை முழுங்கிவிட்டது (சாப்பிட்டு விட்டது) எல்லா நரிகளுக்கும் பசிதீர்ந்துவிட்டது. பசிதீர்ந்தபின் நரிகள் எல்லாம் சேர்ந்து "நாம் காட்டுமிருகமாக இருக்கிறதினாலே, வீட்டுச்சாப்பாடு நம்மளுக்கு கிடைப்பதில்லை. நாம் வீடுகளில் போய் சாப்பிடவும் முடியாது. இனி நீங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ராஜா! நரின்னு யாரோ ஒருவர் இருங்க! நான் வீட்டுக்குப்போயி நல்லா சாப்பிட்டு.

அடிப்பட்டு கஷ்டப்பட்டு வந்தேன். ஆகையால், அடிப்பட்டு வந்த நரிக்கு ராஜாப்பட்டம் வேண்டாம்! எனக்குப் பதிலாக இங்கிருக்கும் நரிகளில் ஒருவர் ராஜாவாக இருங்கள்" என்று சொல்லியது.

பிறகு அங்குள்ள ஆயிரக் கணக்கான நரிகளுள் இது, ராஜா நரி! இது மந்திரி நரி! இது, வீட்டு நரி! இது, கள்ளநரி! இது வங்க நரி! இப்படியாக ஆயிரக் கணக்கான நரிகளுக்குள் அவர்களே பெயர்களை வைத்துக் கொண்டு காட்டில் வாழ்கிறதாம். அந்த நரி ராஜாக்களை இப்போது குரவருடைய கூட்டம்! என்று சொல்வார்களாம்.

முற்றும்.